**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் :SC.No. 495/2021**

**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | குத்தபாஞ்சான் | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Friday of 10.07.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் குத்தபாஞ்சானில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பஸ்ஸ்டாப்பில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.14** ஆகும். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.15** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 03.09.2018ம் தேதி, 10.00 மணிக்கு எதிரி கௌலிகுமார் என்ற முத்துகுட்டியை ராம்நகர் விலக்கு பஸ்ஸ்டாப் முன்பு வைத்து என் முன்பும், பச்சைமால் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளை என் வீட்டிற்கு கட்டிலுக்கு அடியில் சாக்கு போட்டு மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 11.30 மணிக்கு எதிரி கௌலிகுமார் என்ற முத்துகுட்டி வசித்து வரும் வீட்டில் கட்டிலுக்கு அடியில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், பச்சைமால் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.16 15:19:52 +0530